# நந்தி

மாலை 3 | திருவள்ளுவர் ஆண்டு 1999 ஆடி—ஆகஸ்டு 1966 | மணி 10


## விதிமுறைகள் மாறவேண்டும்

சென்னை, அடையாறு, நாட்டு மருத்துவ, கூட்டுறவு மருந்து உற்பத்தி சாலை நிர்வாகிகள் தேர்தல் அண்மையில் நடந்தது. பழைய நிர்வாகிகள் சிலர் மாறி புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. புதிய நிர்வாகிகளைப் பாராட்டுகிறோம்.

நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதில் தற்போது அமுலிலிருக்கும் விதி முறைகளில் சில குறைபாடுகளிருப்பதாக நாம் கருதுகிறோம்.

தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்னாடகம், இந்த மாநிலங்கள் தவிர, பாரதத்தின் மற்ற மாநிலங்களிலும் இந்த கூட்டுறவு மருந்து செய் சாலையின், பங்குதார் அங்கத்தினர்கள் ஆயிரக்கணக்காக இருக்கின்றனர், தேர்தல் சமயத்தில் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் நேரில் வந்து தேர்தலில் பங்குகொள்வார்களென எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழகத்திலிருந்தும், இதர மாநிலங்களிலிருந்தும, தேர்தல் சமயத்தில் சுமார் 350 உறுப்பினர்கள்தான் வருவது வழக்கமாக இருந்துவருகிறது. நாலாயிரம் உறுப்பினர்கள் கொண்ட ஒரு நிறுவனத்தின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதில், 350 பேர்கள் மட்டும் நேரில் வந்து வாக்களித்து முடிவு செய்வதென்பது ஜனநாயக அமைப்பிற்குப் பொருத்தமாகாது என்றே கருதுகிறோம்.

ஆனால் தேர்தல் விதிமுறைகள் சாதகமாயில்லாததுதான் இதற்குக் காரணம். மாநில சட்டசபைகள், பாராளுமன்றம் முதலியவைகளுக்கு நடக்கும் தேர்தல்களில். அந்தந்தத் தொகுதிகளில் நிற்கும் வேட்பாளர்களுக்கு, அத் தொகுதிகளில் பதிவான வாக்காளர்கள் மட்டும்தான் வாக்கு அளிக்க முடியும் என்ற விதியிருப்பது அனைவரும் அறிந்ததே. சென்னை நகர வாக்காளர்கள் பட்டியலில் பதிவாகியுள்ள ஒருவர், குமரி மாவட்டத்தின் ஒரு தொகுதியில் சட்டமன்றத்திற்கு வேட்பாளராக நிற்பவருக்கு வாக்களிக்க முடியாது. கூட்டுறவு நிறுவனங்களின்

தேர்தலில் வேறுமாதிரியான விதிகள் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஜனநாயக அடிப்படையில் ஒரேமாதிரியான தேர்தல்முறை விதிகள் இருப்பதுதான் நியாயமாகும்.

ஒரு உறுப்பினரே, பதிமூன்று தொகுதிகளில் நிற்கும் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதென்பது நகைப்பிற்கிடமாகும். இந்த முறையில், குமரி மாவட்டத்திலுள்ள ஒரு உறுப்பினர், நாகபுரியைச் சேர்ந்த ஒரு வேட்பாளருக்கு இப்பொழுது வாக்களிக்கிறார் என்றால் இது ஜனநாயக தத்துவத்திற்கு இலக்கானதா என்பது சிந்திக்கவேண்டிய விஷயமாகும்.

தவிர, மேலே குறிப்பிட்ட அடையாறு கூட்டுறவு நிறுவனத்தில் உறுப்பினர்களாக யிருக்கும் பரம்பரை வைத்தியர்கள் பெரும்பாலும் வாழ்க்கையில் போதிய வசதியில்லாதவர்கள். தேர்தல் சமயத்தில் இவர்கள் நேரில் சென்னைக்கு வந்து தேர்தலில் கலந்துகொள்ள முடிகிறதில்லையென்பது எல்லோரு மறிந்த உண்மையாகும்.

இவ்வித குறைபாடுகளைத் தீர்க்க சில வழிகளிருக்கின்றன. அந்தந்தத் தொகுதியில் நிற்கும் வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுகளை அச்சடித்து வாக்காளர்களுக்கு தபால் மூலம் அனுப்பினால், அந்தத் தொகுதியில் தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு சீட்டில் குறியிட்டு, தபாலிலேயே திரும்ப அனுப்பிவிட முடியும். இப்படிச் செய்வதால் எல்லோரும் வாக்களிக்க வாய்ப்பு ஏற்படும். உறுப்பினர்களுக்கு வீண் பொருள் செலவு ஏற்படாது. சாதாரணமாக தேர்தல் சமயங்களில் ஏற்படும் பிணக்குகளுக்கு இடமிருக்காது. குறிப்பிட்டவர்களே மீண்டும் மீண்டும் பதவியில் இருக்க முடியாது.

மேலே கூறியுள்ள கருத்துக்களை எல்லா வைத்திய உறுப்பினர்களும் நிதானமாக சிந்தித்து தேர்தல் விதிமுறைகளை மாற்றியமைத்து ஜனநாயக அடிப்படையில் தேர்தல் நடப்பதற்கான வழிகளை வகுக்க முயற்சிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.

## விமோசனம் கிடைக்குமா?

நடைபாதை—மக்கள் நடக்கும் பாதைக்கு நடைபாதை என்று பெயர். ஆனால் சென்னைமா நகரத்தில் நடைபாதைக்கு அந்தப் பெயர் பொருந்தாது. இட்லி, ஆப்பம், வடை விற்பவர்கள், பிச்சைக்காரர்கள், பொம்மை பிளாஸ்டிக் சாமான்கள் விற்பவர்கள், பாதணி செப்பனிடுபவர்கள், கிளி சோதிடர், கேழ்வரகுமாவும் கருப்புக்கட்டி பாகும் கலந்து செய்யப்பட்ட தாதுபுஷ்டி லேகியம விற்பவர்கள், பழம் விற்பவர்கள், தொழு நோயாளிகள், உடைந்த மோட்டார் சாமான்கள், பாதைக்குப்

போடப்படும் ஜல்லி கற்கள் இவைகள் நிறம்பியுள்ள இடத்திற்குத்தான் சென்னை நகரில் நடைபாதை என்று பெயர்.

தமிழகத்தின் சிற்பங்களையும் கோயில்களையும் தமிழ் பண்பையும் கலாசாரத்தையும் பார்த்து மகிழ்வதற்கு வெளிநாடுகளிலிருந்து வரும் யாத்ரீகர்கள் சென்னை நகரின் நடைபாதைகளையும், சிமின்டு பலகைகள் பெயர்ந்து பாதாளத்திற்குக் கொண்டுபோய் சேர்க்கும் நடைபாதைகளையும் மேலே சொன்ன சுகாதாரக் கேடான காட்சிகளையும் கண்டு தம் நாடுகளுக்குப் போய் சென்னை நகரின் அழகைப்பற்றி என்ன பேசுகிறார்கள், அவர்கள் பத்திரிகைகளில் என்ன எழுதுகிறார்கள் என்பதை சென்னைமா நகராட்சியின் நிர்வாகத் தூண்களைத் தாங்கி நிற்கும் பெரியார்கள் சிந்தித்துப் பார்க்க நேர மிருக்கிறதா வென்பதை அறிய ஆவல்கொள்கிறோம்.

நடைபாதைகள் சீர்கேட்டின் காரணமாக, மக்கள் பாதைகளில் நடந்து மோட்டார் விபத்துக் காளாகிறார்கள். பஸ் பிரயாணிகள். பஸ்ஸிற்காக காத்திருக்கும் இடங்களில் நோயாளிகள் ஆக்கிரமித்துக் கொண்டு இரவும் பகலும் அங்கேயே வாழ்கிறார்கள். சுகாதாரக் கேடான நிலையில் விற்கப்படும் தின்பண்டங்களை வாங்கியுண்ணும் மக்கள் நோய் வாய்ப் படுகிறார்கள். இதற்கெல்லாம் விமோசனம ஏற்பட்டால் மக்கள் நோயின்றி வாழ முடியும். இதற்கான வழிகளைச் செய்யவேண்டியது மிக மிக அவசியமாகும்.

---

## சித்த வைத்தியத்தின் வெற்றி

*இந்திய மருத்துவ மாநில போர்டுகளின் குழுவின் (Council of State Boards and faculties of Indian Medicine) நிர்வாகக் கூட்டம் சென்ற ஜூன் மாதத்தில் சென்னையில் நடந்ததில் குழுவிற்கு நடப்பு ஆண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.*

*தலைவர் கவிராஜ் அஷுதோஷ் மஜூம்தார் டில்லி. துணைத் தலைவர் :— ஹக்கீம் அப்துல் அஹாத் - பாட்னா. கௌரவப் பொதுச் செயலாளர் வைத்திய பி. ஆர். கோட்போலே—பம்பாய், துணைச் செயலாளர் :* டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம். *தமிழக அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி முதல்வர், பாளையங் கோட்டை. பொருளாளர் திரு பண்ணாலால் வர்ஸரேயர்—அலிகார்.*

*ஆயுர்வேத பண்டித சிகாமணிகளும், யுனானி ஹக்கீம்களும் நிறம்பியுள்ள ஒரு குழுவில் சித்தவைத்தியப் பேராசிரியர் ஒருவர் துணைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சித்தவைத்தியத்தின் வெற்றியாகும். இனிமேலாவது சித்தவைத்தியத்திற்குத் தேவையான கௌரவமும் மதிப்பும் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.*

# குஷ்ட கஜகேசரி

(சித்த, ஆயுர்வேத வைத்தியர் எஸ். கலியாணராமன், சென்னை.)

சில மருந்துகள்தான் பெயருக்கு தகுந்த மதிப்புடன் அதன் பிரபாவமும் அமைந்திருக்கிறது. சித்த மருந்துகளில் இந்த குஷ்ட கஜ கேசரி மருந்து நல்ல கூட்டு மருந்தாக அமைந்திருக்கிறது. வருடக்கணக்கில் அனுபவசாலிகளான வைத்தியர்கள், மருந்து தயாரிப்பிலும், சிகிச்சையிலும், நுட்ப சாஸ்திர ஆராய்ச்சியும் கொண்டுதான் மருந்தின் தயாரிப்பை நிர்ணயிக்கமுடியும். இந்த குஷ்ட கஜகேசரி மருந்தில் கலந்திருக்கும் வகை தொகுப்பை ஆராயும்பொழுது இதனுடைய சிறப்பு நன்று விளங்கும் பிரதான மான மருந்தினங்கள் அப்ரகபற்பம், காந்தசிந்தூரம், அயச்சிந்தூரம் ரசபற்பம், இந்த நான்கு, தனித்தனி முடிவுபெற்ற மருந்துகள் சேர்க்கையினால் சிறந்த ரசாயன மருந்தாக அமையப்பெற்றது. இந்த சாதாரண முடித்த மருந்து சேர்க்கை ரசாயனம், சாதாரண ரசாயன பாகத்திலிருந்து, பெரிய மகத்துவம் பொருந்திய ரசாயன உயர்ந்தரக மருந்தாக உபயோகிக்கத் தகுந்ததாக உருவாக்கத் தகுந்த தாக இருக்கிறது. மருந்து கட்டுப்பாடு என்பதாக சட்டம் வரப் போவதாக சொல்லப்படுகிறதே, அந்த சட்டமும், தீர்மானிக்க முடியாத பெருமளவு மதிப்பு வாய்ந்த மருந்தாக, அமைந்துவிடும். இந்த சட்டத்திற்கு காரணமான தேசீய மருத்துவ விஞ்ஞானிகள் திகைக்கும்படியான சட்டதிட்டத்திற்கும் மேலே யோசிக்கும் அளவிற்கு இந்த சித்தமருந்தின் தயாரிப்பாகும். இதில் கலந்திருக்கும் இரண்டு பற்ப, இரண்டு சிந்தூர வகைகள் தயாரிப்பின் விவரம் குறிப்பிடவில்லை. கலக்கும் ஒவ்வொரு மருந்தும் தனித்தனி, பற்பல சாஸ்திர ஆதாரப்படி அனேக வதமான பாக முறையோடு தயாரிக்க இடம்கொடுக்கிறது. அப்ரக பற்பம் சாதாரண பற்பத்தி லிருந்து உயர்ந்த ரக தயாரிப்பு வரையில் எடுத்துக்கொள்ள சந்தர்ப்ப மளிக்கிறது. சித்த வைத்திய சாஸ்திரப்படி பற்பம் என்றால் வெண்மை நிறமாகத்தான் இருக்கவேண்டும். சாம்பல் நிறம் வந்தாலே மட்டரகமான பற்பத்தில்தான் சேர்க்கவேண்டும். இன்னும் இந்த அப்ரகத்தில் 4 அல்லது 5 விதங்கள் இதில் கிருஷ்ணபரகம் சவேதாப்ரகம் கூடுமானவரை வெளுப்பு சாயல்வரை தயாரிக்கலாம் ஒரு தனி அப்ரகத்திலேயே உயர்ந்த மகத்துவம், பொருந்திய சகஸ்ரபுட அப்ரகம் சிந்தூர பஸ்பம் வரை ரசாயன வகையாக தயாரிக்க சந்தர்ப்பமிருக்கிறது. அப்படியே காந்த சிந்தூரம், அயச்சிந்தூரத்திற்கும் உயர்ந்தரக ரசாயனம் வரை தயாரித்து சேர்க்க இடமளிக்கிறது.

இத்தோடு ரச பற்பம் என்னும் மருந்தும் கலக்கவேண்டும். ரசபற்பம் வெண்மையாய் தயாரிப்பது தமிழக சித்த மருத்துவர் களிடம் அரிதாக இருக்கிறது தனியாகவே இந்த ரசபற்பத்தின்

மருத்துவம் கூறுவதற்கே இயலாத விஷயமாகும். இந்த தனி ஒரு மருந்தே கல்ப மருந்தாக தெய்வீகத்தன்மை பொருந்தியது என்பது சாஸ்திராதாரமாகும். சாதாரண எரிப்பு, லகுபுட, பதங்க உபர சகலப்புட எரிப்பு திட்டத்தின் மூலமாகவும் சில மருந்து சரக்குகள் மத்தியில் வைத்து ரசபற்பம் தயாரிக்கமுடியும். தயாரிக்கிறார்கள். இந்த ரசபற்ப மருந்து ஆபத்து, தோஷங்கள், தயாரிப்பில் ஏமாற்றம், நஷ்டங்கள், அதிசிரமங்கள் நிறைந்த தெய்வீக தயாரிப்பாகும். இருந்தாலும் சில மகான்களாகிய சித்தர்கள் குறைந்தபக்ஷ மருந்துகளில் சேர்க்க பதங்கவகை பாகத்தில் தயாரித்து மருந்துகளில் சேர்க்கச்சொல்லி இருக்கிறார்கள். அந்த திட்டப்படி சேர்ப்பது நன்மை தரக்கூடியது. சிந்தூரவகை பற்பவகையினும் சற்று மேலானது குஷ்ட கஜ கேசரி மருந்து அடையாறு கூட்டுறவு தயாரிப்பில் தயாரிக்கிறார்கள். இதைப்பற்றி சர்ச்சை செய்யப் பட்டது. அதாவது இந்த ரசாயன மாத்திரையில் ரசபற்பத்திற்கு பதிலாக Calomel என்னும் இங்கிலீஷ் ரஸகற்பூர பஸ்பம் கலந்து செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது. இது பொருத்தமானதல்ல, தேசீய சித்த மருந்து என்னும் பெயருக்கு மதிப்புக்குறைவானது. மருந்திற்குரிய சிறப்பான மதிப்பை பெருமளவு குறைத்துவிடும். வியாபாரத்துறையிலும் அதிக அளவு தயாரிக்கமுடியாமல் தேங்கி விடும் என்பது எனது அபிப்ராயமாகும். இதைப்பற்றி மிகவும் ஆலோசிக்கவேண்டியதவசியமாகும் இந்த Colomel இங்கிலீஷ் ரஸக் கற்பூரபஸ்பம் பேதிக்கு உபயோகிக்கப்படும் மருந்து. அதிக அளவில் கொடுத்தால் பேதியாகி பலவீனப்படுத்தும். வாய் வேக்காடு, வாய்பிடிக்கும் குண முடையது. இதைச்சேர்ப்பதில் தீங்கு சிலருக்கு உண்டாக இடமளிக்கிறது. இன்னும் இந்த மருந்தின் மதிப்பான பெயருக்கிணங்க, குஷ்டம், மேகம், சம்மந்தப் பட்ட வியாதிகள் நீண்ட கால சிகிச்சைக்குரிய வியாதிகள் சொற்ப, சில நாள்களில் சொஸ்தப்படுத்த இயலாத வியாதியின் உற்பத்தி விருத்தி கிரமமாகும். அப்படியிருக்க Colomel சேர்ப்பதில் பேதியாகவும், உஷ்ணம் கொடுத்து வாய்க்காடு கொடுக்கும் தன்மை யானதை நீண்ட நாள் மருந்தாக கொடுக்க இயலாது. இதற்கு பதி லாக சித்த மருத்துவ சாஸ்திர ஆதாரப்படி ரசசெந்தூரம் என் னும் மருந்து தயாரித்து வருகிறார்கள். இது நல்ல குணத்தையும், தனியாக உபயோகிக்கவும், நீண்டகால உபயோகத்திற்கு தகுந்த படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை சேர்த்துக் கொள்வதால் நல்ல பலனைத் தருவதுடன் மேகம், குஷ்டம், நீர் வகை வியாதி களுக்கு நீண்ட நாள் மாத்திரையாக உபயோகிப்பதில் கோளாறு ஒன்றும் ஏற்படுவதற்கில்லை. இன்னும் விஷத்தடுப்பு மருந்தாக அறுவை சிகிச்சைக்குப் பின்னரும், பலவீனத்திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் பயன்படும்படி ரசாயனமாக உபயோகப்படுத்தலாம்.

இத்தகைய மகத்துவம் பொருந்திய சித்த மருந்து, சித்த மருத்துவ விஞ்ஞானிகளுக்கே எட்டாத, அளவிட முடியாத சிறந்த ரசாயன மருந்தாகும்.

# முக்கிய அறிவிப்பு

"நந்தி", மாலை 3, மணி 9 வரை இதுவரை வெளியாயிருக்கிறது. சென்ற ஆண்டில் நேயர்கள் பலர் பழைய பிரதிகள் கிடைக்காமல் வருந்தினார்கள்.

இப்பொழுது ரூ. 5 சந்தா அனுப்பினால் 1 முதல் 9 இதழ்களும் அனுப்புவதோடு பாக்கி மூன்று இதழ்களும் தொடர்ந்து அனுப்பப்படும்.

கொஞ்சப் பிரதிகளே கைவச மிருக்கின்றன. சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் உடனே ரூ. 5 மணியார்டர் அனுப்பவும்.

நிர்வாகி,

"நந்தி".

---

## இந்திய மருத்துவ கூட்டுறவு மருந்து உற்பத்திசாலை

### நிர்வாகிகள் தேர்தல்

1 டாக்டர் வி. நாராயணசுவாமி—தலைவர்
2 ,, சி. எஸ். உத்தமராயன் - துணைத்தலைவர்
3 ,, டி. வி. கோபாலகிருஷ்ணன்-நிர்வாகக்குழு உறுப்பினர்
4 ,, கே. ஆர். பாலசுப்பிரமணியம் ,,
5 ,, யு. எல். நரசிம்மம் ,,
6 ,, எம். கிருஷ்ணமூர்த்தி ராவ்— டைரக்டர்
7 ,, எம். நரசிம்மராவ் ,,
8 ,, கே எல். ராவ் ,,
9 ,, எம். வி. ரமணய்ய பந்துலு ,,
10 ,, பி. முத்துக்கருப்ப பிள்ளை ,,
11 ,, ரா. கோ. பழனியப்பா ,,
12 ,, வி. ஆர். பாலகிருஷ்ண நாயர் ,,
13 ,, ஏ. மஜூம்தார் ,,

மேற் குறிப்பிட்டவர்கள் சென்னை அடையாறு இந்திய மருத்துவ கூட்டுறவு மருந்து உற்பத்தி சாலையின் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கபட்டிருப்பதாக செயலாளர் டாக்டர் ஓய். கொண்டல் ராவ் அறிவிக்கிறார்.

# நோயாளியின் பரிசோதனை

(டாக்டர் பு. மு வேணுகோபால். எச். பி ஐ. எம்.
பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி முதல்வர்)

(முன் இதழ் தொடர்ச்சி)

நோயாளன் நடக்கும்போது நடையின் குணத்தை நோக்க வேண்டும்.

உடையை கவனிக்கவேண்டும். சுத்தமான உடையா என்று நோக்குவது ஒருபுரமிருக்க அவ்வுடை நோயாளன் உடலுக்கு பொருந்தி யிருக்கிறதா? சிறுத்திருக்கிறதா? பெரியதாக யிருக்கிறதா? ஏற்றத்தாழ்வாக இருக்கிறதா? ஆகியவைகளை கவனிக்க வேண்டும்.

நோயுற்ரோன் உடல் வளர்ச்சியும் வன்மையும்:—

நோயாளனுடைய உடற் வளர்ச்சியையும் வன்மையையும் சாதாரண காலத்தில் அதே வயதுள்ளவன் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதோடு ஒத்திட்டு பார்க்கவேண்டும். அதே வயதில் ஒருவருக்கொருவர் சிற்சில விகற்பங்கள் உண்டெனினும் பொதுவாக உடல் வளர்ச்சியும் வன்மையும் ஒரே நிலையாய் இருக்கவேண்டும் என்பது பேரறிஞர்கள் கருத்து.

எனவே வயதிற்கு தக்கவாறும் உயரத்திற்கு தக்கவாறும் ஆராய்ச்சி செய்து கணக்கெடுத்திருக்கிருர்கள். அதனைக் குறிக்கோளாகக்கொண்டு ஒருவனின் உடற் வளர்ச்சியை அனுமானிக்க வேண்டும்.

மற்றும் நல்ல உடற் வளர்ச்சியுள்ள சுகவாசிக்கு பரந்த விசாலமான மார்பும் தோள் பட்டையும் உண்டென்பர். ஆகவே மார்பின் குறுக்களவை உட்சுவாசம் செய்யும்போதும் வெளிச்சுவாசம் செய்யும்போதும் அளந்தெடுப்பது வழக்கம். இதனுல் மார்பின் சுவாச அளவைத் தெரிவிக்கும் அளவு குறைந்தால் போதிய அளவு காற்றை உட்கொண்டு சுவாசம் விட நுரையீரலில் இடம் இல்லை என்று தெரிகிறது.

உடற்கட்டை அறிவதற்கு ஒருவன் "தாட்டியாக இருக்கிருனு"? ஒல்லியாக அல்லது சன்னமாக இருக்கிருனு? என்பதை ஆராய்ந்தால் புலனுகிறது. ஒருவனுக்கு நடுத்தரமான தசை வளர்ச்சியும், உடலில் பள்ள மேடுகளில்லாமல் ஒரே மயமாக கொழுப்பினுல் பூசிய பிரகாசமான தோல் வனிமையும், கட்டான தசை வளர்ச்சியும் ஆகியவைகள் இருக்குமேயானுல் உடற்கட்டுள்ளவன் எனப்படுபவன். தோல் மென்மையாயும் மிருதுவாகவும் தென்படும்.

உடற்கட்டில்லாதவனுக்கு தசைகள் தளர்ச்சியுற்றுத் தொங்கும். தோல் சுருங்கி பிரகாசமில்லாமல் உலர்ந்தோ சொர சொரப்பாகவே தோன்றும். சில வேளை தசை மிகவும் சுருங்கி எலும்பும் தோலுமாக கண்குழி விழுந்து, நெற்றி மேடிட்டு, தாடை ஒட்டி மிகவும் சன்னமாக இருப்பான். மேற்சொன்ன உடற்கட்டில்லாத குறி குணங்கள் பெரும்பாலும் கயம், சூளை, புற்று, நீரிழிவு ஆகிய நோய்களில் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை உணர்த்தும்.

முகத்தெளிவு — அடுத்தது காட்டும் பளிங்குபோல் ஒருவனுடைய மனோ நிலையை அறிவதற்கு முகம்தான் கண்ணாடி. அவன் உட்கருத்தை முகம் அறிவிக்கும். நோயாளியின் முகத்தெளிவை மிகவும் அநுபவத்தில் தேர்ச்சிபெற்ற மருத்துவனால் அறியமுடியும். சில நோயாளிகள் மருத்துவனை நேருக்கு நேராக பார்க்கமாட்டார்கள். தலையைக் குனிந்துகொண்டு கண்ணோட்டத்தை அடிக்கடி புதைத்துக்கொண்டும் பேசுவார்கள். இவர்கள் மருத்துவனிடம் தன் நோயின் உண்மையை மறைக்கிறார்கள் என்றே தெரிந்து கொள்ளவேண்டும் இதுவே சில வேளை வெட்கத்தாலும் இருக்கலாம். இந்நிலை மருத்துவன் நன்றாக ஆலோசிக்கவேண்டிய சந்தர்ப்பமாம். சில நோயாளியின் கண்கள் மருத்துவனையே துருவி ஆராயும். மருத்துவன்பால் அடிக்கடி கண்ணோட்டம் செல்லும் இப்பேர்ப்பட்டவர்களின் பார்வை சந்தேகப் பார்வையைப்போலிருக்கும். இவர்கள் கயம் அல்லது சூளை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று யூகிக்கலாம். சிலர் முறைத்து பார்ப்பார்கள். அது ஒரு பயனற்ற பார்வையாய் இருக்கும். முகத்தில் தெளிவில்லாமல் ஓர்விதமான பயனற்ற பார்வையாய் தோன்றும். இன்னவர்களுக்கு சுய உணர்வு மறைந்து கிடைக்கிறது எனக் கருதவேண்டும். சில நோயினர்க்கு "முண்டக்கண்" தோற்றம் இருக்கும். இங்கு சில கண்ணோயுனாலும் அல்லது சீவசத்துப் பொருள்கள் அதிகமானதாலும் உண்டாவதாகுமெனப்படும். சிலருக்கு அரை கண் மூடியும், கண குழி விழுந்தும் பசையற்றும் முகம் காணும்.

கண் வட்டத்திற்கு கீழ் முகம் அதைத்து அல்லது வீங்கிக் காணும். இது பிருக்கத்தின் தாபிதத்தை குறிக்கும். சில வேளை இதே அதைப்பு மூச்சுத் திணரல் நோயிலும் காணும். முக்கியமாக குழந்தைகளுக்கு கக்குவான் நோயிலும் காணும்.

மூக்கு மிகவும் பள்ளமாக அழுந்தி இருந்தால் கருவில் தோன்றிய கொருக்கு நோயைக் குறிக்கும். மூக்கின் நுனி சிவப்பாகத் தென்பட்டால் இருதய நோயைக் குறிக்கும். சுவாசம் செய்யும் போது மூக்கு அசைவது தெரிந்தால் கோழைத்தனம், மூக்கடைப்பு, முதலியவற்றை குறிக்கும்.

உதடு-உதடு பாண்டு (வெளுப்பு) நோயில் வெளுத்திருக்கும். இருதய நோயில் நீல நிற சாயல் தெரியும். நுரையீரல் தாபித

மடைந்திருந்தால் உதட்டில் அக்கி காணும், முக்கியமாக அவைகள் கபவாத சுரத்தில் காணும்.

காது—மந்தபுத்தி யுள்ளவர்களுக்கு காது சிறுத்து எலிக்காது போலிருக்கும். வெறி நோயாளிகளுக்கு சிறு இரத்தக் கட்டிகள் காணும்.

தாடை—தாடை மனிதனின் உடற் வளர்ச்சியைக் காட்டும். பாண்டு நோயில் வெளுத்துக்காணும். இருதய நோயில் சிவந்த வட்டமான அடையாளம் தாடை எலும்புக்கு நேராகத் தோன்றும். சுகவாசிக்குத் தாடை நன்றாக தளதளவென்று பிரகாசமாய் மினு மினு வென்றிருக்கும். உடல் வளர்ச்சி யில்லாதவர்க்கும் க்ஷய நோயினர்கரும் தாடை ஒட்டி சுருங்கிக் காணும்.

மேலே சொன்னவைகளை அனுமானித்ததுமல்லாமல் பொது வாக நோயாளன் அவாவை நோக்க வேண்டும். இந்நோய் இமைப் பொழுதில் போகவேண்டும் என்ற ஆவலோடு சிலர் காண்பர். இந் நோயால் பீடிக்கப்பட்டுவிட்டோமே என்ற பரிதாபகர காட்சி யோடு காண்பர் சிலர் அருவருப்பாக பயனற்ற உடற்தோற்றத் துடன் காட்சி அளிப்பர். சிலர் உணர்ச்சி யில்லாமல் பயனற்ற பார்வையோடு மரக்கட்டை பொம்மை மாதிரி இருப்பர். நெற்றியில் சுருக்கங்கள் தோன்றியிருக்கிறதா? என்று கவனித்தல் வேண்டும். நெற்றி மழ மழப்பாக யிருக்கிறதா? என்று பார்க்கவேண்டும். வாய் கோணலாக யிருக்கிறதா? பேசும்போது வலியினால் முகம் விகாரம் அடைகிறதா? என்று கவனித்தல் வேண்டும். பல்லைக் கடித்துக்கொண்டு முக்கல் அல்லது முணரல் இருக்கிறதா? மனத் தில் பரபரப்பு காண்கிறதா என்று பார்க்கவேண்டும்?

வலி :—தலைவலி? மார்புவலி? தொந்தியில் வலி இம்மாதிரியான குறி குணங்கள் பெரிதும் குழந்தைகளின் முகத்திலிருந்துதான் நோயை நிதானிக்க வேண்டும். ஏனென்றால் குழந்தைகளுக்கு குறி குணங்களைச் சொல்ல தெரியாது.

தோல் :—(1) நிறம்—வெளுப்பு, மஞ்சள், நீலம் முதலியவை • வெளுப்பு நிறம் பாண்டு நோயைக்குறிக்கும், மஞ்சள் நிறம் காமாலை நோயைக் காட்டும். புள்ளிகள் நிறைந்த நிறம் சில நோய்களில் காணும். நீல நிறம் இருதய நோயிலும் மூச்சு திணரல் நோயிலும் காணும். (2) பருக்கள், தழும்புகள், கட்டிகள் ஆகியவைகள் இருக் கின்றனவா என்று பார்க்கவேண்டும். (3 ஊதல் அல்லது சோகை— உடல் முழுமையாயினும் சில பாகத்திலேனும் ஊதல் இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். (முக்கியமாக கண் வட்டத்திற்கு கீழ் பாகம், கால் அல்லது பாதம் இவ் வீக்கங்கள் ஆரம்பத்தில் கண்டு மறைந்து நாட் செல்ல செல்ல மறையாமலும் உடல் முழுவதும் வீங்கும். நீர் கோர்த்து அதைத்து காணும்.

ணகள்:-நோயாளன் கை உள்ளங்கை விரல்கள் ஆகியவற்றை கவனித்தல் வேண்டும். நோயாளனோடு கை குலுக்கவேண்டும். கை குலுக்கும்போது கை பிடியின் வன்மை எவ்வாறு இருத்தல் என்பதை கவனிக்கவேண்டும். உள்ளங் கையின் தோற்றம், உருவம், அமைப்பு நகங்கள் முதலியவைகளை கூர்ந்து கவனித்தல் வேண்டும். சில நோய்களில் நகம் மேடிட்டு பரந்து விசாலமாய் இருக்கும். சில வாத நோய்களில் கை சுருங்கி சிறுத்துக் காணும். சிலருக்கு கை நடுக்கலுடன் உதறும் மாத்திரை உருட்டுவதை போன்ற நடுக்கம்; சிலருக்கு கை உதரும். (தொடரும்)


# ஓர் அறிவிப்பு?

வைத்தியர்கள் - டாக்டர்கள் - கம்பவுண்டர்கள் - ஹோமியோபதி வைத்திய சாலைகள் - மருந்துக் கடைகள் - ஜெனரல் மெர்ச்சண்டு & மளிகை கடைகளுக்கும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மிகச் சிறந்த

## மூன்று வகையான பேதி மருந்துகள்!

**மாதிரி சாம்பிள் இலவசம்!**

1 ரத்னு சுகபேதி அல்வா (இனிப்புள்ளது)
2 S. V. R. சுகபேதி எண்ணெ (காப்பியில் சாப்பிட)
3 S. V. R. சுகபேதி மாத்திரை (சக்கரையில் சாப்பிட)

விற்பனையாளர்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் சப்ளை செய்யப்படும்.

——— தேவைக்கு எழுதவும் ———

தயாரிப்பாளர்: சித்த வைத்திய பண்டிட்

## S.V.R. கண்டர் சன்ஸ் R.I.M.P.

"இராஜ சித்த வைத்தியசாலை"

அரிசிப்பாளையம் :: சேலம்-9.

N. B:—மற்றும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளின் கேட்லாக் இலவசம்.

# கைமுறை அனுபவ வைத்தியம்

(சித்த வைத்தியர் பென்சாமின், லாலுகாபுரம், திருநெல்வேலி)

(முன் இதழ் தொடர்ச்சி)

### கெற்பம் உண்டாக எண்ணெய்

கடுகு மஞ்சள் இந்துப்பு காயம் வீளி தைவேளை நிலவாரை விளக்கெண்ணெய் டடி இ-கொடிக்கள்ளிப்பால் கழ-க-சேர்த்துக் காய்ச்சி-குளி குளித்தவுடன் கொடுக்கவும் பத்தியம்.

**17.** பறவை தோஷம்: குஞ்சியுடம் புலர்ந்து குடலு நீர்ப் பாலுந் தங்கள் நெஞ்சையுள் சுளித்து வாங்கும். வீறம் விளி வேறெதாகும் துஞ்சிடும் கண்குளிர்ந்துயில் வெளுப்புதனை போக்கும், பஞ்சிமோடியின்றுளே பறவையின் தோஷமென்று பேசுவார் பேசுவாரே.

### விஷகடிகளுக்கு வைத்தியம்

தேனி, குளவி, முதலிய வண்டுகள் கொட்டினால் அதிக வேதனை எடுக்கும். கடந்தை என்ற தேனி கொட்டினால் மரணம் ஏற்படும்.

சிகிட்சை: இவைகளுக்கு நவச்சார ஜய நீர் தடவினால் குணம் கிடைக்கும். அதிக ஆயாசம் ஏற்பட்டால் பிராந்தி, நவச்சாரமது, அபினி இவைகளைக் கொடுக்கலாம். கொட்டின இடத்தை பூதக் கண்ணாடியால் பார்த்து, கொடுக்கு ஒடிந்து தைத்துக் கொண்டிருந் தால் அதை இடுக்கியால் மெதுவாக எடுத்துவிட வேண்டியது.

### அக்கினி விரணம்

அக்கினிச் சுவாலை, நெருப்பு, வெந்நீர், இவைகளில் ஏதாவதொன்று உடலில் பட்டால் முதலில் கொப்புளங் கண்டு, பின்னர் தோலுரிந்து, ரணமுண்டாகும். அக்கினியின் வேகத்திற்குத் தக்கபடி மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவைகள்: தோல் மாத்திரம் சிவக்கல். 2. கொப்புளம் உண்டாகுதல். 3, பட்டவிடம் கருகிவிடல்.

அக்கினியால் உண்டாகும் விரணம் அதிகமாய் இருந்தால் தளர்ச்சி ஏற்படும். தேகம் வெளுத்து கையும் காலும் சில்லிட்டுப் போகும். நாடி தளர்வடைந்து தீவிரமாய் நடக்கும். அடிக்கடி குளிர்காணும். இதை உடனடியாக கவனிக்காவிட்டால் குறிகள் எல்லாம் அதிகமாகி, மேல்மூச்சு ஏற்பட்டு, மரணம் சம்பவிக்கும்.

சிகிட்சை: இதனால் உண்டாகும் கொப்புளத்தால் அதிக நீர் சேர்ந்து வேதனை எடுத்தால் ஊசியால் குத்தி நீரை வெளியேற்றி விட்டு, சுண்ணாம்பு நீர் 1 அவுன்ஸ் எடுத்து அதற்கு சரிசமமாக நல்லெண்ணெய் கூட்டி குழப்பி, அதில் துணியை நனைத்து, ரத்தத்

தின் மேல் போட்டு துணி காயாமல் மேற்படி தைலத்தையே போட்டுக் கொண்டு வந்தால் குணமாகும் சீழ் சேர்ந்து நாற்ற மடிக்காமலிருக்க அடிக்கடி துணியை மாற்றிக் கொண்டிருத்தல் நலம். மேலும், தேங்காய் எண்ணெய் தடவி வாழை இலையை வைத்துக் கட்டிக் கொண்டும் வரலாம். விரணங்கள் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். சீழ் பிடித்த பெரிய விரணங்களை தினம் காலையும் மாலையும் நீர் விட்டுக் கழுவி மெழுகு களிம்பைத் துணியில் தடவி காயத்தின்மேல் போட்டுக் கொண்டு வரவேண்டியது. அதிக ஆயாசம், தளர்ச்சி ஏற்பட்டால், நல்ல மருந்துகளையும், சத்துள்ள உணவுகளையும் கொடுத்து, உடலை தேற்ற வேண்டியது. தாங்க் முடியாத வேதனை இருந்தால் அளவோடு அபினி கொடுக்கலாம். ரணங்கள் உலர்ந்து வரும்பொழுது, உறுப்புகள் கேடுற்றுவிடாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது. குறிப்பாக விரல்கள் ரணமானால், ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளாவிக்க, விரல் களின் இடுக்குகளில் (இடையில்) துணி அல்லது பஞ்சு வைத்து, தனிப்படுத்தி வைக்க வேண்டியது.

**வெந்நீர் விரணம் :** இதையும் மேற்கூறியபடியே சிகிட்சை செய்து வசப்படுத்த வேண்டியது.

*திரவங்கள், காரங்கள், கரப்பான் பூண்டுகள் ஆகியவைகளால் உண்டாகும் தொந்தரவுகள்.*

கந்தக திரவாகம் (Sulphuric acid) பட்டால் முதல் கறுத்து விடும். வெடியுப்பு திராவகம் (Nitrice Acid) பட்டால் மஞ்சள் நிறமாகும். கறியுப்பு திரவாகம் (Hychrochloric Acid) பட்டால் வெண்மை நிறம் கொள்ளும். தீமுறுகல் பாஷாணம் (Phosphorous) பட்டால் வெந்துபோகும்.

**சிகிட்சை :** மேற் கூறியவைகளில் ஏதாவதொன்றினால் பாதிக் கப்பட்டிருந்தால், பாதித்த இடத்தை சவுக்காரம், சாம்பல், அரைப்பு, இவைகளில் ஏதாவதொன்றை வெந்நீரில் கலந்து, கழுவி, பிறகு மெழுகு களிம்பு போடவேண்டியது.

புதிதாக சுட்டச் சுண்ணாம்பு. நவச்சார ஜயநீர் இவைகள் பட்டால், வெந்நீரும் காடியும் கலந்து, அதனால் கழுவி, களிம்பு போடவேண்டியது; சவ்வீரத்திற்கு கோழி முட்டையின் வெண் கருவும், காடிக் காரத்திற்கு கறியுப்பு ஜலம்விட்டுக் கழுவி பின்னர் மருந்து போடவும், கரப்பான் பூண்டுகள் (Vegetable) உண்டாக் கிற எரிச்சலுக்கு துணியை வெந்நீரில் நனைத்துப் போட்டு, பின்னர் களிம்பு போடவேண்டியது. காஞ்சொறி, பூனைக்காலி அல்லது செந்தட்டியினால் ஏற்பட்ட சொரிக்கு, புகையிலை ஜலம் விட்டுக் கழுவினால் சமனடையும். மேலும் சிறுநீரை பெய்து மண்ணில் குழைத்து மேலுக்குப் பூசி, உள்ளுக்கும் சிறிதளவு சாப்பிட்டால், எந்த விஷமும் உடனே முறியும். கைகண்டது.

# உயரமும் எடையும்

(சித்த வைத்தியர் அ. மாணிக்கவாசகம், சென்னை)

வெட்ப தட்ப நிலைக்கு ஏற்றவாறு மக்களின் வளர்ச்சியில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. குளிர் பிரதேசங்களில் உள்ளவர்களின் வளர்ச்சி, உயரம், எடை முதலானவை உஷ்ண பிரதேசங்களில் பிறந்து வளர்ந்தவர்களைவிட அதிகமாகக் காணப்படுகிறது. ஆண்களின் வளர்ச்சிக்கும் பெண்ணினத்தின் வளர்ச்சிக்கும் பலவிதமான வித்தியாசங்கள் உண்டு. அவைகளை பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

குழந்தைகளின் வளர்ச்சி 5 வயது வரையில் மிகவும் அதிகமாக இருக்கும். இது ஏறக்குறைய ஆண் பெண் இரு வகைக்கும் சமமாகவே அமைகிறது. ஆனால் பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளைவிட குள்ளமாகவும் எடையில் குறைவாகவும் இருக்கிறார்கள். 5 வயது முதல் 10 வயதுவரையில் ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளைவிட அதிகம் வளர்ச்சியுள்ளவர்களாக தோன்றுகிறார்கள். 10 வயது முதல் 14 வயது வரையில் பெண்கள் ஆண்களைவிட உயரத்திலும் எடையிலும் அதிகமாகவே இருப்பார்கள். 15 வயது முதல் 20 வயது வரையில் ஆண்கள் பெண்களைவிட அதிக வளர்ச்சியுடன் தோன்றுவதோடு 23 வயது வந்ததும் முழு வளர்ச்சியை அடைகிறார்கள். ஆனால் பெண்களின் வளர்ச்சி 15 வயது முதல் 17 வயது வரையில் மிகவும் தாமதமாகவும், 17வது வயதை அடைந்தவுடன் அவர்கள் தம் முழு உயரத்தையும் பூரண அளவில் கனத்தையும் அடைகிறார்கள். இதில் இன்னொரு முக்கிய ரகசியம், குழந்தை பருவத்திலும் யௌவன வயதிலும் குளிர்காலத்தில் எடை அதிகரிக்கிறது.

இந்த விவரங்களை வைத்தியப் பெரியோர்கள் தங்கள் தினசரி தொழில் முறையில் அனுசரித்து பலன் அடைவார்களாக.

### சாதாரணமான வளர்ச்சியினால் ஏற்படும் உயரமும் அதற்கான எடை அளவும்

| வரிசை எண் | சராசரி உயரம் அடி-அங்குலம் | சராசரி எடை பவுண்டு வகையில் இந்தியர் | ஐரோப்பியர் | இந்தியருக்கும் ஐரோப்பியருக்கும் உள்ள சராசரி எடை வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1 | 4 அடி 11 அங் | 90 | 90 | — |
| 2 | 5 அடி | 95 | 95 | — |
| 3 | 5 அடி 1 அங் | 98 | 120 | 22 பவுண்டு |
| 4 | 5 அடி 2 அங் | 100 | 126 | 26 பவுண்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 5 அடி 3 அங் | 104 | 133 | 29 பவுண்டு |
| 6 | 5 அடி 4 அங் | 106·5 | 139 | 32·5 பவுண்டு |
| 7 | 5 அடி 5 அங் | 109·5 | 142 | ,, |
| 8 | 5 அடி 6 அங் | 113 | 145 | 32 பவுண்டு |
| 9 | 5 அடி 7 அங் | 116·5 | 148 | 31·5 பவுண்டு |
| 10 | 5 அடி 8 அங் | 121 | 155 | 34 பவுண்டு |
| 11 | 5 அடி 9 அங் | 125 | 125 | — |
| 12 | 5 அடி 10 அங் | 129 | 169 | 40 பவுண்டு |
| 13 | 5 அடி 11 அங் | 156·5 | 136·5 | — |
| 14 | 6 அடி | 147·5 | 178 | 30·5 பவுண்டு |


திருச்சி சமயபுரம்

# நேசர் வைத்தியசாலையின்

## பரம்பரை அனுபவ மருந்துகள்

துப்பாக்கி மெழுகு :
தங்கலிங்க மெழுகு :
தேவாமிர்தம் :
பிண்டத்தைலம் :
சஞ்சீவித் தைலம் :

உபயோகியுங்கள்.

" சித்தமணி " P. L. பெர்ணண்டஸ்

சமயபுரம் P. O.

திருச்சிராப்பள்ளி.

# குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள். எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ எஸ்,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.)

## திருக்குறளும் பதினெண்கீழ்க் கணக்கும்

(முன் இதழ் தொடர்ச்சி)

திருக்குறள் பதினென் கீழ்க்கணக்கு என்னும் தொகை நூலைச்சேர்ந்தது. திருக்குறளுக்கும் கீழ்க்கணக்கைச் சேர்ந்த மற்ற நூல்களுக்கும் மிகுதியாகக் கருத்து ஒற்றுமை உண்டு. ஒரு சில வற்றைமட்டும் இவண் ஆராய்வாம்.

பிறர் மனைவியை நெறிதவறி விழைபவனிடமிருந்து பகை, பாவம், அச்சம், பழி ஆகிய நான்கும் ஒரு பொழுதும் நீங்காது.

"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்" (பிறனில் விழையாமை)

அச்சத்தின் தன்மையை நாலடியாரில் நன்கு விளக்கப்படு கின்றது. இதோ அப்பாடல்.

"புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றுமற் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்" (சமண முனிவர்)

"இவ்வையகத்திலுள்ள எல்லா உயிர்களும் மழையை நோக்கி வாழ்கின்றன. அதுபோன்று குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கிவாழ்கின்றனர்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி" (செங்கோன்மை)

இதே கருத்தை நான்மணிக்கடிகையில் நாம் காண்கின்றோம்.

"கோனோக்கி வாழும் குடியெல்லாம் தாய்முலையின்
பானோக்கி வாழும் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழ முலக முலகின்
விளி நோக்கி இன்புறூஉங் கூற்று" (விளம்பி நாகனார்)

மக்களின் உடலைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் பயப்பதாகும். அம்மக்களின் இனிய மழலை மொழியைக் கேட்டல் செவிக்கு இன்பம் தருவதாகும். இதுதான் ஆசிரியர் கண்ட மக்களின் இயல்பு.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (மக்கட்பேறு)

குழவியின் மழலைமொழியின் இனிமையை பூதஞ்சேந்தனர், வள்ளுவர் போன்றே இனிது விளக்குகின்றார். இதோ அவ்வினிய பாடல்.

"குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாகு லினிது" (இனியவை நாற்பது)

சான்றோர் அவையில் பேதை புகுதல், ஒருவன் தூய்மையில்லாதவற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்தார் போன்றதாகும்.

"கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல்" (பேதைமை)

திருவள்ளுவரின் தெளிவுரையே கபிலரின் கருத்துரையாக அமைகின்றது.

"ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா"
(இன்னா நாற்பது)

"வேந்தன் தன் செயலில் முனைந்து வெற்றிபெற்றபின் நாம் மனைவியோடு கூடியிருந்து அன்றைய மாலைப் பொழுதிற்கு நல்ல விருந்தளிப்போம்" என்று தலைவன் வாயிலாக வள்ளுவனார் மொழிகின்றார்.

"வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து" (அவர்வயின் விதும்பல்)

மதுரைக் கண்ணங் கூத்தனார்

"வீறுசால் வேந்தன் வினையு முடிந்தன
ஆறும் பதமினிய வாயின—ஏறோ
டருமணி நாக மனுங்கச் செருமன்னர்
சேனைபோற் செல்லு மழை" (கார் நாற்பது)

என்று மொழிகின்றார். உடல் முழுவதும் மறைக்கும் அளவிற்கு அம்புகளால் புண்பட்டபோதிலும் யானை தன் பெருமையைப் போர்க்களத்தில் நிலைநிறுத்தும். அதுபோன்று ஊக்கம் உடையோர் இடுக்கண் வந்தவிடத்தும் தளரமாட்டார்.

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு" (ஊக்கம் உடைமை)

பொய்கையார் களிற்றின் ஆற்றலைப்பற்றி,

"இடைமருப்பின் விட்டெறிந்த வெஃகின்கான் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோன்றி—நடை மெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து" (களவழி நாற்பது)

என்று செப்புகின்றார். ஒருவனுடைய கண்ணிற்கு அணிகலமாவது கண்ணோட்டம் என்னும் சிறந்த பண்பாகும். அஃதின்றேல் அது புண்ணாகவே கருதப்படும்.

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப்படும்"

இக்குறட்பாவின் முதல் அடி திரிகடுகத்தில் அப்படியே அமைந்துள்ளது.

"கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வி இம்மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள" (நல்லாதனார்)

வள்ளுவனார் வழங்கியுள்ள "செய்நன்றி அறிதல்", பொறையுடைமை", "இனியவை கூறல்", "இன்னா செய்யாமை", "கல்வி" "ஒப்புறவறிதல்", 'அறிவுடைமை', 'பெரியாரைத் துணைக்கோடல்' ஆகிய அதிகாரங்களின் பெயர்களைப் பெருவாயின் முள்ளியார் தமது பனுவலில் கையாளுகின்றார்.

"நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற அறித லறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்ட லிவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து" (ஆசாரக் கோவை)

சொல்லின் திறப்பாட்டை அறிந்து சொல்லை வழங்கவேண்டும். அத்தகைய சொல்வன்மையைவிடச் சிறந்த அறமும் பொருளும் வேறு கிடையா.

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்"

இத்தகைய சொல்வன்மையை "வனப்பு" என்று காரியாசான் பாராட்டுகின்றார்.

"மயிர்வனப்பும் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு" (சிறுபஞ்ச மூலம்)

ஒருவன் பெறத்தக்க பேருகளில் அறியவேண்டியவைகளை அறியும் நன்மக்களைத்தவிர வேறு பேறுகள் கிடையா.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறந்த
மக்கட்பேறு அல்ல பிற''

கூடலூர் கிழாரும் மக்கட் பேற்றையே பெரும் பேருகக் கருதுகின்ருர்.

"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
மக்கட் பேற்றின் பெறும்பேறு இல்லை''
(முதுமொழிக் காஞ்சி)

தூதனுக்கு நல்லதோர் இலக்கணத்தை வரையறுக்கின்ருர் வள்ளுவர். மாண்ட அறிவு, விழையத்தக்க தோற்றம், கல்வி ஆகிய இம்மூன்றும் தூதனுக்கு வேண்டிய அம்சங்களாகும்.

"அறிஉரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு (தூது )

வள்ளுவர் வாய்மொழியை ஓட்டியே ஏலாதியும் தூதனுக்கு இலக்கணம் பகர்கின்றது.

"மாண்டமைந்தா ராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்--பூண்டமைந்த
காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்'' (கணிமேதையார்)

"என் தலைவன் ஒருநாள் என்னிடம் வருவானுக. வந்தபிறகு என் துன்பநோய் எல்லாம் நீங்குமாறு நான் நன்கு நுகர்வேன்'' என்று திருக்குறளில் வருகின்ற தலைவி மொழிகின்ருள்.

"வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட'' (அவர்வயின் விதும்பல்)

திணைமொழி ஐம்பதில் இத்தகைய கருத்துள்ள ஒரு பாடலைப் பார்க்கின்ரேம்.

"ஏன விடத்திட்ட ஈர்மணிகொண்டு எல்லிடைக்
காணவர் மக்கள் கனலெனக் கைகாய்த்தும்
வானுயர் வெற்பன் வருவான்கொல் என்தோழி
மேனி பசப்புக் கெட'' (கண்ணன் சேந்தனுர்)

(தொடரும்)

# ஆங்கில இலக்கியத்தில் திருக்குறட் கருத்துக்கள்

(பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ். தமிழ்ப்பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்)

(முன் இதழ் தொடர்ச்சி)

## திருவள்ளுவர்—பன்யன் (JOHN BUNYAN)

### தக்கார்க்கு ஈதல்

'பாத்திரம் அறிந்து பிச்சை இடு' என்பது நம் நாட்டுப் பழமொழி. ஏழையின் பசியைத் தீர்ப்பதே தலையாய அறம், செல்வத்தைப் போற்றிக் காக்க வேண்டிய முறையும் அதுவே.

“அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள் வைப் புழி” (குறள்)

ஏவன் ஒருவன் ஏழைக்காகத் தன் பொருளைப் பயன்படுத்துகிருனே அவன் அப்பொருளைப் போல் பதின்மடங்கு மிகுதியாகப் பெறுவான் என்று பன்யன் தம் நூலில் (Pilgrim's Progress) பாடுகிருர்.

'He who bestows his Goods upon the Poor,
Shall have as much again, and ten times more'

பிறர்க்கு உதவி புரிவது நல்லது. ஆனுல் ஏழையின் கண்ணீரைத் துடைப்பதே பேரறமாகக் கருதப்படுகின்றது. இதற்கு இருபெரு உள்ளங்கள் தக்க சான்று பகர்கின்றன. ஏழையின் மனம் குளிர்ந்து வாழ்வு மலர்ந்தால் செல்வம் செழித்துக் கொழிக்கும் என்ற அறவுணர்வு வள்ளுவர்-பன்யன் ஆகியோர் உள்ளத்தில் அரும்பிய பொது உணர்வாகும்.

## திருவள்ளுவர்—காலரிட்ஜ் (S. T. COLERIDGE)

### கூடலும் பிரிதலும்

கூடினுல் இன்பம். பிரிந்தால் துன்பம். இதுவே உலகத்து இயற்கை. கூடும்போது மனம் மகிழ்ந்து மலர்கின்றது. பிரியும் போது 'இனி என்று சேர்வோம்' என்று ஏங்கிச் சோர்கின்றது. மக்கள் உள்ளத்தின் தன்மையை வள்ளுவரும் காலரிட்ஜும் சொல்லோவியத்தில் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காட்டுகிருர்கள்.

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்' (குறள்)

'To meet, to know, to love-and then to part
Is the sad tale of many a human heart.!
(couplet written in the volume of poems)

மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் உள்ளத்தில் எழுகின்றன உணர்ச்சிகள் யாவும் ஒரே தன்மையன. சாதி, இனம், சமயம், மொழி, நாடு ஆகியவை மக்களைப் பிரிப்பதைப் போல மக்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியைப் பிரிக்க முடியாது. அன்புணர்வு மக்கள் அனைவருக்கும் பொது,

## திருவள்ளுவர்—ஹென்லி

(WILLIAM ERNEST HENLEY)

### விதியை வெல்லலாம்

தளராது உழைப்பவன் விதியையும் வென்று விடுவான் என்பது வள்ளுவர் உட்கிடக்கை.

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்' (குறள்

'என் விதிக்கு நானே தலைவன்' என்று ஹென்லி உரைக்கிறார். I am the master of my fate.' விதி என்று ஒன்று இருந்தாலும் விதியை மதியாலும் உழைப்பாலும் வெல்லலாம் என்ற தெளிந்த கருத்து வள்ளுவர்க்கும் ஹென்லிக்கும் உடன்பாடு என்பது தேற்றம். அறிவும் உழைப்பும் செம்மையாக இயைந்து நன்னெறியில் இயங்குமானால் விதி எவ்வளவு வலிமையாக இருப்பினும் தோற்றுவிடும் என்பது உலக உண்மை. இவ்வுண்மையைத்தான் இரு பெரும் புலவர்களும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறார்கள். இவ்வுண்மையையே வேறொரு ஆங்கிலக் கவிஞர் மேலும் விளக்குகிறார்.

Let us, then, be up and doing,
With a heart for any fate ( A psalm of life)

—Long fellow

## திருவள்ளுவர்—ஆஸ்டின் டப்சன்

(HENRY AUSTIN DUBSON)

### அழியாச் செல்வம்

செல்வம் இருவகைப்படும். ஒன்று அழியககூடியது. மற்றொன்று அழியாதது. பொன், பொருள் யாவும் அழியக்கூடியவை. கல்வி அழிவில்லாமல் நிலைத்து நிற்பது. கல்வியின் அழியாத் தன்மையை.

கேடில் விழுச்-செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றயவை' என்று வள்ளுவர்

இயம்புகின்றார். இதே கருத்தைக் கொண்ட டப்சன் எல்லாம் அழியக்கூடியவை. கல்வி ஒன்று மட்டும்தான் நிலைபெற்று நிற்கும் என்று பொருள்படப் பாடுகின்றார்.

All passes, Art alone
Enduring stays to us' (Ars victrix)

கல்வியின் அழியாத் தன்மையையும், ஏனைய செல்வத்தின் நிலையாமையையும் ஒன்றாகவே இணைத்துக் கூறுகின்ற பான்மை இரு புலவரிடமும் அமைந்திருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. உலக உண்மையில் கருத்து வேறுபாடு இல்லை என்பது இருவர் கூற்றினும் நன்கு புலனாகின்றது.

## திருவள்ளுவர்—ஜேம்ஸ் ஸ்டீபன்ஸ்

### பொதுநல வாழ்வு

ஒருவன் தன் கடமையை உணர்ந்து சமுதாயத்திற்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்தல் வேண்டும். இல்லாவிடில் அவன் உயிருடன் இருப்பினும் செத்தவனாகவே கருதப்படுவான்.

'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்' (குறள்)

தன்னிடம் பொருள் இருந்தும் பொதுநலத்திற்குப் பயன்படுத்தாதவன் கழுத்து முறிந்து சாகட்டும் என்று ஜேம்ஸ், ஸ்டீபன்ஸ் கூறுகின்றார்.

'Let the man who has and doesn't give
Break his neck, and cease to live.'

—In the Imperative Mood

பொது நல வுணர்வற்றவன் வாழ்க்கை வாழ்க்கையன்று. தன்னலம் ஒன்றையே குறியாகக் கொண்டு பொதுநலம் கடுகளவு கூட இல்லாதவன் இவ்வுலகில் இருந்தாலும் இறந்தாலும் ஒன்றே. அவன் இருப்பதை விட இறப்பதே மேல்.

## திருவள்ளுவர்—ஜேக்விஸ் மாரிடேய்ன் (JACQUES MARITAIN)

### அறிவும் பண்பும்

அறிவு, பண்பு ஆகிய இரண்டில் தலையாயது எது? பண்பே தலையாயது என்று வள்ளுவர் மிகத் தெளிவாக உரைக்கிறார். ஒருவனது அறிவு அரத்தைப் போல் கூர்மையாக இருப்பினும் அவனிடம் பண்பில்லாவிட்டால் அவன் மரமாகவே கருதப்படுவான்

'அரம் போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் (குறள்)

பண்பில் முகிழ்ப்பதே அன்பு, அறிவைவிட அன்பே உயர்ந்தது என்ற உண்மையைக் கிறிஸ்துவ சமயம் மக்களுக்கு உணர்த்தியிருக்கின்றது என்பதை ஜேக்விஸ் தெளிவுபடுத்துகிருர். 'Christanity taught men that love is worth more than intelligence.' (I Believe) அறிவு உடல் போன்றது. பண்பு உயிர் போன்றது. அறிவு கட்டிடத்தின் மேல் பாகத்தைப் போன்றது பண்பு அடித்தலத்தைப் போன்றது. அறிவு மாறக்கூடியது. பண்பு நிலைத்தது. அறிவு சிந்தனையைத் தூண்டும். பண்பு உள்ளத்தை மலர்விக்கும். அறிவைவிட பண்பே உயர்ந்தது என்பது தெளிந்த கருத்து.

## முடிவுரை

அறிவுச் சாரமாகத் திகழும் திருவள்ளுவரின் தெளிந்த கருத்துக்களையும் ஆங்கில மொழியிலுள்ள பல்வேறு இலக்கியங்களில் திகழும் அரிய கருத்துக்களையும் இக்கட்டுரையில் ஒப்பிட்டு நோக்கினேம். வள்ளுவர் வாய் மொழியும் ஆங்கில அறிஞரின் ஆய் மொழியும் சொல்முறை, உவமை மரபு ஆகியவற்றில் ஆங்காங்கு சிறிது வேறுபட்டாலும் அடிப்படையில் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் ஒன்றுபடுகின்றன. மொழி, பண்பாடு ஆகியவற்றில் தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் வேறுபாடு இருப்பினும் எண்ணம் உணர்ச்சி ஆகியவற்றில் இரண்டிற்கும் அடிப்படையில் ஒற்றுமை உண்டு என்பதை நன்கறிந்தோம். மாங்கனியும் ஆரஞ்சுப் பழமும் தோற்றத்தில் வேறுபட்டிருப்பினும் அவற்றில் காணப்படும் சுவை இனிப்புச் சுவையே. அதுபோல் தமிழரும் ஆங்கிலேயரும் புறத்தால் வேறுபட்டிருப்பினும் அகத்தால் ஒன்றுபட்டவரே. தமிழர் நெஞ்சமும் ஆங்கிலேயர் உள்ளமும் ஒரு பொருளையே உணர்த்தி ஒன்ருகவே காட்சியளிக்கின்றன, கருத்துணர்ச்சி அடிப்படையில் இருமொழி இலக்கியங்கட்கும் உறுதியான உறவு உண்டு என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் புலனுகின்றது. வாழ்க அவ்வுறவு.

---

குறிப்பு:

இந்த சீரிய ஆராய்ச்சிக் கட்டுரையை "நந்தி"யின் வாயிலாக வெளிப்படுத்திய பேராசிரியருக்கு நாம் மனமுவந்த நன்றி செலுத்துகிறேம்.

—ஆசிரியர்.

# சௌந்தரிய லகரி

## முதல் பாகம்

## ஆனந்த லகரி

(சித்த வைத்தியர், எச். பி. முத்து கிருஷ்ணன், நெற்குப்பை)

(முன் இதழ் தொடர்ச்சி)

*அறிவு இலர்க்கு இதய திமிரம் ஈரும் அளவு*
*அற்ற ஆதவர், அளப்பு இலா*
*எறி கதிர் ப்ரபை, குழைத்து இழைத்தனைய*
*தீவி, யாமனீ நினைப்பு இலார்*
*செறி மதிக்கு, இணரின் ஒழுகுதேன் அருவி:*
*தெரு கலிக்கு அருள்மணி குழாம்,*
*பிறவி மைக்கடல் விழாது எடுப்பது ஒரு*
*பெரு வராக வெண் மருப்பு அரோ!*

**உரை:**—அறிவில்லாதவர்களுக்கு, அவர்களுடைய நெஞ்சத்திலே உள்ள இருளை (அந்தகாரத்தை) போக்குவிக்கின்ற, அநேக சூரியன்களின் எண்ணிறந்த எறிகின்ற கதிர்களின், காந்திகள் அனைத்தும் ஒன்றுபடக் குழைத்துச் செய்ததுபோன்ற தீபமாய் விளக்காய் நிற்கின்றனள், இறைவி. அவ்விறைவியான யாமனீயின் நினைப்பே அற்ற விவேகமில்லாதவர்களுக்கோ, அவர்களையும் ஆட்கொள்ளவேண்டி அவர்களது உள்ளத்துக்குப் பூங்கொத்திலே நின்று ஒழுகும், தேன் பெருக்காய் திகழ்கின்றனள். ஒருவரை நெருக்கும், வறுமைக்கு அவ் வறுமை தீர, விரும்பியவைகள் எல்லாம் கொடுக்கும் சிந்தாமணி என்ற இரத்தினக் குவியலாய் விளங்குகின்றனள். ஒருவரைப் பிறவியாகிய இருள் கடலினிடத்து விழாது, உய்விக்கும்பொருட்டு, முன்பு மஹாவிஷ்ணு அவதாரஞ் செய்த ஒப்பற்ற பெரிய வராகத்தினுடைய மூவண்ணிறமான, கோரை பற்கள் போலவும் இருந்து இரட்சித்துக் கரை ஏற்றுகின்றனள்.

**குறிப்பு:**-இதனால் இறைவியல்லாது, ஒரு நன்மையும் அடைவதில்லை என்பது பெற்றாம்.

*தேவெனப் புகழ, அதில் நிமிர்ந்து நிகர்*
*செப்புவார் அபய வரதமாய்*
*பாவகத்து, அபினயத்தொடு(உ)ற்ற, கை*
*பரப்பி, என் பயம் ஒறுக்குமே?*
*யாவருக்கும் அஃது அரிது, நின்பதம்*
*இரப்ப, யாவையும் அளிக்குமால்*

மூவருக்கும் ஒரு தாவரப் பொருள் ஏன்,
மூலமே தழையும் ஞாலமே!

உரை:-அயன், அரி, அரன் என்கின்ற மும்மூர்த்திகளின் உற்பத்திக்கும் காரணப்பொருள் என்று சொல்லப்படுகின்ற வேரானது வளரும் பூமியானவளே!!

உன்னையல்லாத, பிற தெய்வங்களைப் புகழ, அத் தெய்வங்களும் நிமிர்ந்து அபயமும் வரதமும் ஆகிய பாவனையினால் அபிநயத்தோடு உற்ற கைகள் அவ்வாறு விரித்து யாது பயத்தைப் போக்குவிக்கும். உன்னையல்லாத யாவர்க்கும் பயத்தைப் போக்குதற்கு அரிது. ஆகையினால் ஒருவனால் இரப்படுவன நின் திருவடித் தாமரைகளேயாகும். அவை யாவும் நல்கும் இயல்புடையவைகள் ஆகும்!!

உற்பத்திக் காரணப்பொருள் என்று சொல்லப்படுகின்ற வேர் எனப்படுவதும் முக்குணங்களைக் குறிக்கும். அவை வளரும் பூமியானவள் இறைவியேயாகும்.

அபயமும், வரதமும்:-சம்சார பயத்தைப் போக்கி மோக்ஷத்தையளிக்கும், அபய முத்திரையானது வலதுகையில் தேவதைகளின் பிம்பங்களில் சாதாரணமாகக் காணப்படுவது. உலக இன்பங்கள் வேண்டுவோர்க்கு அளிக்கும் வரமுத்திரை இடதுகை தாழ்த்தி காணப்படுவது.

ஆனால் மகா திரிபுர சுந்தரியாம், இறைவி, தனது கரங்களில் பாசம், அங்குசம் புஷ்பபாணம், கரும்புவில் ஆகியவற்றை தரிப்பதால் அபய வரதங்கள் இறைவின் திருவடித் தாமரைகளிலேயே அமையப்பெற்றிருக்கின்றன. அபய வரமளிக்கும் பிற தெய்வங்களும் தேவியின் பாதங்களையே பூஜிக்கின்றனர்.

(தொடரும்)

---


## உங்கள் கவனத்திற்கு—

மக்கள் நோயின்றி வாழ, நோய் வந்த பின் சுகமடைய, இலகுவான சிகிச்சை முறைகள்.

தொடர்பு கொள்க:—

சித்த வைத்தியர் எஸ். அம்பி

ஸ்ரீலஸ்ரீ சுந்தரானந்தர் சித்த வைத்தியசாலை

ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

# நிஜானந்த போதம்

(சித்த வைத்தியர் தில்லை ஆர். விஜயன் பி. ஓ. எல்.
சூளை, சென்னை-7)

(முன் இதழ் தொடர்ச்சி)

புருவ மென்ற சுழிமுனையிலே மைந்தாகேளு
போத மென்ற அருள்ஞான செந்தீபத்தி
திருவிருந்த மாளிகையில் தீபங்காணும்
செங்கமலக் கண்ணாலே நன்றாய்ப்பாரு
குருவிருந்த யிருந்தயமா முக்கோணத்தில்
குவிந்துமனக் கண்ணாலே தன்னைப்பார்த்தாய்
கருவிருந்தபதியது தான்மைந்தா மைந்தா
கண்காணத் தோணுமடா கருவைப் பாரே.
விண்ணைப்பார் தன்னைப்பார் மண்ணைப்பாரு
மேன்மை பெரு குருவருளை மேவிப்பாரு
பெண்ணைப் பார்த்தலையாதே பெண்தான் தேகம்
பிரியமுடன் தேகமதைப் பேணிப் பார்த்தால்
கண்ணப்பா துலங்குமடா அந்தக் கண்ணால்
காணலாஞ் சித்து வெகுகண்ணில் காணும்
மண்ணப்பா வெந்த சடந்தன்னைப் பேணு
மாந்தருக்கு என்னவரும் மண் தானாமே.
பிரண்டுமனம் நிலையாதே பித்தருண்டு

பிராண நிலையறியாத மூடருண்டு
முரண்டுடனே முறடுகட்டி வளையாருண்டு
மோக மென்ற மாய்கையிலே திரிவாருண்டு
திரண்டகோணமுனி நுனியை யறியாருண்டு
செகத்தினிலிப்படியதிகஞ் செய்யப் போமோ
அறண்டகண்ணு மிருண்டகண்ணு மறியாப்பாவி
அடக்க மென்ற காவியத்தையறிந்து பாரா
தன்னிலையைத் தானறியா மூடர்காணும்
சாத்திரத்தின் பயனறியாச் சண்டிமாடு
கண்ணறிந்து விண்ணொளியைக் கருதிப்பார்க்க
கருத்துடனே வாசிநிலைக் காலைக் காணார்
யெண்ணிரைந்த வட்சரத்தி னியல்பு காணார்
யெட்டு ரெண்டு மறியாமல் யேகமென்பான்
விண்ணிரைந்த யேகபரா பரந்தான் மைந்தா

இவ்வாறு நம் முன்னோர்களாகிய சித்தர்கள் நமக்கு நல்ல வழிகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இம் மஹான்களுடைய வாக்கியம் அனுபவத்தைப் பெறாமல வாய்மதமாய் பேசினவர்கள், பெருகுடலும் சிறுகுடலும் பிறண்டு மஹா துன்பமடைவர் என்றும் சொல்வதுண்டு. மஹான்களைத் தரிசித்து அவர்களின் அருளைப் பெற வேண்டியது நம் தலையாய கடமையாகும். அதற்கு அந்தர் முகமாய் அடியிற்கண்டபடி தியானித்துவர அவர்கள் பிரத்தியக்ஷமாய் திருவருள் பாலிப்பர், அறிவுக் கண்களுக்கு நன்றாகத் தோன்றுவர், சித்திகளும் கிடைக்கும்.

செய்ததமிழ் தனையறிந்து பதினெண்பேரைச்
செம்மையுடன் காண்பதற்கு மூலங்கேளு
சைதன்னிய மானதொரு தன்னைப்போற்றி
சதாகாலம் ஓம், கிலீம், ரங், அங், சிங் கென்று
மெய்தவறா பூரணமா யுருவே செய்தால்
வேதாந்த சித்தரைத்தான் வசமாய்க் காண்பாய்
உய்த்முடன் அவர்களைத்தான் வசமாய்க் கண்டால்
உத்தமனே சகலசித்துக் குதவியாமே.

சித்த சுத்தியோடு, மேற்கண்ட மந்திரத்தை ஆசிரியர் மூல மாகத் தெரிந்து செய்துவந்தால் சித்தர்களின் அருள்கிடைத்து நாம் நல்வழி யடைய முடியும். இதன் உட்பொருள் அறியாது எழுதிய வாக்கியங்களை ஆயுள் பூராவும் ஜெபித்துவந்தாலும் பயன் கிடடாது என்பதையும் குறிப்பிடுகிறேன். ஆகையால் இதன் தன்மைகளை செவிமடுத்து அனுபவத்தில் காண்பதே சாலச் சிறந்தது.

இனி புரியட்டம், சூத்திரம் முதலியவைகளை காண்போம். புரியட்டம்:-சடமாகிய சரீரம் பிரமன் கூறு, உதிரம், மாலின்கூறு இதில் சூத்திரமாவன:—சி. கரத்தீ சீவன். வ, கரகாற்று மயேசன், ய, கர ஆகாயம் சதாசிவம். விந்து, நாதம், சித்தி, சிவன் விணுட்டு, பரை ஆக 8. இதன்மீது வெளிபாழ், வொளிபாழ், வெளி வொளி பாழ் இவைகள் கடந்து உன் மனையாளிட மென்றும் அல்விட மிருப்பவர் சிவயோகிகளென்று மறை கூறுகிறது. இவ்வனுபவம் பெருவது தகுந்த சிறந்த அனுபவமிக்க ஆசிரியரைய ணுகி அவரது நிழல்போல் உடனிருந்து உண்மையாகப் பழகி தெரிந்துகொள்ள வேண்டியது. இதற்கு நீண்ட நாட்களுமாகலாம். இதற்கு மாணவரின் திறமையும் நல்லொழுக்கமும் தூய்மையான உள்ளமுமே காரணமாகும். ஆனாலும் இவை யனைத்திற்கும் மனமே முன்னிலைக் காரணமா யிருக்கிறது. மனம் அலைவுறாமலும் நிதானத்துடனு மிருக்கவேண்டும். மனமானது எப்பொழுதும் ஒன்றை நாடியே நிற்கும், அதற்குப் பல வழிகளிலும் அறிவுக்குக் கட்டுப்படாமல் சிதைவுறும் தன்மையுடையது. அதற்கு அசைவற்று நிற்கும்

தன்மை கிடையாது, அவ்வளவு துரித வேகமுடையது நன்மார்க்கமோ துன்மார்க்கமோ சுபாவம் சூழ்நிலைக்கேற்ப அலையும் தன்மையுடையது. அதை அறிவின் வசப்படுத்தி நிறுத்துவதே நல்லோர் கடமையாகும்.

தன்னையறியு மறிவுதனைப்பேரில்
பின்னைப் பிறப்பில்லை வீடு (ஔவைக்குறள்)

ஆகையால் தன்னிடத்தே உள்ள சக்தியை அறியாது வீணே அலைந்து திரிந்துகொண்டிருப்பவரும் அனேகருண்டு.

தனதுள்ள நூலைத் தானே கல்லாதான்
என்னூலைக் கற்றாலுமென் (யோகசித்தி)

என்னிலேயிருந்த தொன்றையா னறிந்ததில்லையே
என்னிலேயிருந்த தொன்றையா னறிந்துகொண்டபின்
என்னிலேயிருந்த தெயாவர் காணவல்லிரோ
என்னிலே யிருந்திருந்து யானுணர்ந்துகொண்டனே

(சிவவாக்கியர்)

ஓசையில் சத்தம், முட்டையில் உயிர்ப்பு, வித்தில் சத்தாகிய முளை, பூவில் வாசனை, பழத்தில் சுவை, இரும்புண்ட நீரைப் பிரித்துக்காட்ட யில்லாமைபோலும் நிறைந்தனர், எள்ளில் எண்ணை, பாலில் நெய், கரும்பில் சர்க்கரை, தேய்வில் அக்கினி, சொல் முடிவில் பொருள் தோன்றுதல்போல் அக நோக்குடையவர்கள் காண்பார்கள். நால்வகை தோற்றத்தில் மானிடமென்னும் வடிவங்கொண்டு மேற்கண்ட அனுபவங்களை அடையாமல் உலகம்மெச்ச சரீரமீது பல வேடங்களைத் தரித்து நான் யோகி, சோகி, பரதேசி, தம்பிரான், சாமி, தபசி, பக்தன் என்று சொல்லிக்கொண்டு வீண் காலங்களைப் போக்கினால் இவ் வருமையான மானிடப்பிறவி வீணைகப் பிரதிவில் லாபமாய்விடும், நான்தான் என்பது யாது அதைச் சூழ்ந்த கருவி கரணாதிகள் எவ்வாறுதித்து எவ்வாரொடுங்குமென சித்தாந்தமுற்று நிற்பதே எம்மதச் சார்பனருக்கும் சிறந்த பேறு பெரும் நிலையாகும்.

திருவருள் போகத்தை யளித்து செனன மரண துயரத்தை நீக்கி துரியாதித நிலையிலிருந்தும் குருவிற்கு உடல் பொருள் ஆவி யென்னும் உடல் சரீரத்தையும் ஆவி உயிர்ப்பையும், பொருள் அறிவையும் தத்தம் செய்த மாணவர்களில் மந்தன், மந்தாதரன், தீவிரன், அதிதீவிரன் என்னும் பக்குவ திரங்கள் நான்குவிதங்களாயிருக்கிறது. அதிலும் பிரமச்சாரி கிரகஸ்தன் (இல்லறத்தோன்) சந்நியாசி, வானப்பிரஸ்தன், அதிவரணாசிரமம் பெற்றவர்களாகவுமிருக்கின்றனர்.

(தொடரும்)

# சித்த வைத்திய சிறப்பு மருந்துகள்

## புது உருவம்

### கூஷ்மாண்ட் அல்வா

சரீர புஷ்டி உண்டுபண்ண
மனக்கவலை போக்க
உடல் சூட்டை தணிக்க
உற்சாகம் காட்ட

காற்றுப் போகா டின்களில் வெண்பூசணி
மற்ற சரக்குகளும் சேர்க்கப்பட்ட அல்வா.

450 கிராம் டின் ரூ. 4-80

### ஸ்பெஷல் பர்ஃபி

தேங்காயின் சத்தும், ஊட்ட சத்துக்களும் சேர்த்து கேக் மாதிரி தயாரிக்கப்பட்டது. ஜீரண சக்தியை வலுப்படுத்தி நரம்புகளுக்கு ஊட்டமளிக்கும்.

450 கிராம் டின் ரூ. 4-80

### வாழைத்தேன்

சித்த வைத்தியத்தின் சிறப்பு உணவு. ஊட்ட சத்துக்களுடன் கூட டியூப்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.

150 கிராம் டியூப் ரூ. 1-95

## டாக்டர் நிவா ஸ்கெமிக்கல்ஸ்,

பார்மகுடிகல் மானுபாக்சரர்ஸ், நியூட்ரீமெண்ட்ஸ்,
32, கமலாலயம் வடகரை,

## திருவாரூர்.

த. பெ. எண். 19 (தஞ்சை மாவட்டம்) தொலைபேசி. 142

# எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமுமாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னுவது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பயனுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந்திக்க விரும்பினாலும் சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினாலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத்தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், முட்டி, முதுகு, இடுப்புவலி, நரம்புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்துகளை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம் குறையும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. தெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 50-00

2. தெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 30-00

விபரங்களுக்கு:

தலைமை ஆபீஸ்:

## சிவராஜ்
## சித்த வைத்திய சாலை

சிவதாபுரம் போஸ்டு

சேலம் 2

# தி இந்தியன் மெடிகல் பிராக்டீஷனர்ஸ் கூட்டுறவு பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185.

அடையாறு. மதராஸ்-20.

தபால் பெட்டி 907. போன் 71013. 71014

தலைவர் : Dr. V. நாராயணசாமி H.P.I.M.,

உபதலைவர் : M. A. பத்மநாபராவ். L.I.M

**அங்கத்தினராகும் வாய்ப்பு :**

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றும் பட்டம் பெற்ற வைத்தியர்களும்.

2. பஞ்சாயத்து முனிஸிபாலிடி மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும் கழகங்களும்.

3. பிரதம கூட்டுறவு சங்கங்களும் மத்திய கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளைத் தயார் செய்கிறோம்.

எங்களுடைய மருந்துகளைப் பதிவு செய்யப்பட்ட மருந்து ஷாப்புகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**எமது புதிய வெளியீடுகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வைத்திய யோகரத்னாவளி | (ஆங்கிலம்) | ரூ. | 6—50 |
| 2. | ,, தமிழ் ரூ. 6—00 | (தெலுங்கு) | ரூ. | 6—00 |
| 3. | சித்த பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. | 3—00 |
| 4. | ,, தமிழ் ரூ. 3—00 | (தெலுங்கு) | ரூ. | 3—00 |
| 5. | யூனானி பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. | 3—00 |
| 6. | ,, தமிழ் ரூ 3—00 | (தெலுங்கு) | ரூ. | 3—00 |
| 7. | ரசரத்ன சமுச்சயம் | (தெலுங்கு) | ரூ. | 10—5 |

தபால் செலவு தனி

**கிளைக் காரியாலயங்கள் :**

1. 20-320 பொட்டி பொட்லவாரி வீதி, கவர்னர்பேட்டை விஜயவாடா (ஆந்திர ராஜ்யம்).
2. 264, காட்டன்பேட்டை பெங்களூர்-2 (மைசூர் ராஜ்யம்)
3. நகர விற்பனை நிலையம் :—4-186 மவுண்ட்ரோட், சென்னை-2.
4. கிளை விற்பனை நிலையம்:—வைஸ்ய ஹாஸ்டல், கச்சிகூடா ஸ்டேஷன் ரோட், ஐதராபாத்.
5. 48, தெற்கு மாசி வீதி, மதுரை-1

Y. கொண்டல் ராவ்,

காரியதரிசி.